

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம் கீரப்பாக்கம் கிராமத்தில் 17.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி அமைக்கும் பணிக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், டி.ஆர்.பி. ராஜா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 8.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணியினை காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் சேலம் மாவட்ட பல்நோக்கு விளையாட்டு வளாகத்தில் 11.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதள பாதை அமைக்கும் பணிக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 12.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.12.2025) சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வகையில் தயார் செய்வதற்காக தடகள வீரர்கள் ர.மானவ், ஜெ.ஆதர்ஷ் ராம், கூடைப்பந்தாட்ட வீரர் பி. ஃபியோடர் ஆதித்தன், குத்துச் சண்டை வீரர் பி.தர்ஷன், தடகள வீரர் யோபின், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வாலிபால் வீராங்கனைகள் ம.ராகஸ்ரீ, பா. சாதனா ஆகியோருக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து மொத்தம் 2,80,000/ ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அண்மையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்ற 7ஆவது ரோல் பால் உலகக் கோப்பை 2025போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளில் இடம் பெற்ற வீரர் தீபக் ராஜா, வீராங்கனை எஸ்.எஸ்.மதுமிதா, பயிற்சியாளர் எஸ்.எஸ்.சுஸ்மிதா ஆகியோர் நேற்று முன்தினம் (31.12.2025) சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சைக்கிளிங் வீரர் ச.பிரனேஷ்க்கு சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்க 7,55,000 ரூபாய் மதிப்பிலான அதிநவீன பந்தய சைக்கிளை நேற்று முன்தினம் (31.12.2025) வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, உடனிருந்தார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு அன்னவாசல் வடக்கு ஒன்றியம் சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் அன்னவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து வரவேற்பில் மாவட்ட அரசு வழக்கறிஞர் பூங்குடி எம். சிவா முன்னிலையில் மாவட்ட மாணவரணி துணை .அமைப்பாளர் வாகை. கோ.அண்ணாதுரை மற்றும் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் முத்துக்காடு க.வெள்ளைச்சாமி , ஒன்றிய இளைஞரணி து.அமைப்பாளர் கீ.முத்துக்காடு அ.கற்பூரச்சோழன் நிகழ்வினை ஒருங்கிணைத்தனர்.

### கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# சேலம் கிழக்கு மாவட்டம் அரியானூரில் மாரத்தான் போட்டி!

## எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. – டி.எம்.செல்வகணபதி எம்.பி. துவக்கி வைத்தனர்! வெண்ணிலா சேகர் ஏற்பாட்டில்!

சேலம்,ஜன.-2-

தமிழ்நாடு துணை முதல்வரும், தி.மு.க. இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, சேலம் கிழக்கு மாவட்டம், வீரபாண்டி தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் வெண்ணிலா சேகர் ஏற்பாட்டில், அரியனூரில் இளந்தலைவர் மாநில அளவில் மாரத்தான் போட்டி நடந்தது. இதில் 20, 8, 6, 2 கிலோ மீட்டர் என நான்கு பிரிவுகளின் கீழ்போட்டி நடந்தது. போட்டியை சேலம் கிருபானந்தவாரியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் டீன் எழில் வேந்தன், அசோக் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் மாதவராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.



தமிழ்நாடு துணை முதல்வரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சேலம் கிழக்கு மாவட்டம், வீரபாண்டி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் வெண்ணிலா சேகர் ஏற்பாட்டில் , அரியனூரில் இளந்தலைவர் மாநில அளவில் மாரத்தான் போட்டி நடந்தது. இதில் 20, 8, 6, 2 கிலோ மீட்டர் என நான்கு பிரிவுகளின் கீழ் போட்டி நடந்தது. இதில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு, சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்.பி., மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு விருது மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினர்.

இந்த போட்டியில் சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, பள்ளி கல்லூரி மாணவ-மாணவிகள், இளைஞர்கள், பெண்கள் ,பொதுமக்கள் என 4,079 பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இதில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு, சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்பி, மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்பி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு விருது மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினர்.

இதில் வீரபாண்டி தொகுதி பார்வையாளர் கிருபாகரன், மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ் , மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர் தருண், ஒன்றிய செயலாளர் உமாசங்கர் , ஏ.ஏ. ஆறுமுகம், கே.பி. எஸ். அன்பு மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். போட்டிக்கான ஏற்பாடுகளை வீரபாண்டி ஒன்றிய செயலாளர் வெண்ணிலா சேகர் செய்திருந்தார்.

மேலும் இந்த மராத்தான் போட்டியில் சமூக நீதி மற்றும் பெண்ணியத்தை முன்னிறுத்தி நான்காயிரம் வீரர் வீராங்கனைகள் பங்கு பெற்ற மாரத்தான் என்ற அடிப்படையில் நோபல் வேர்ல்ட் ரெக்கார்டு அமைப்பு உலக சாதனைக்கான சான்றிதழை திருமதி. ஹேமா, மாவட்ட செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., டி.எம். செல்வகணபதி எம்.பி., ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய செயலாளர் வெண்ணிலா சேகர் அவர்களிடம் வழங்கினார்.